# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## அரையாண்டு -மதிப்பீட்டுத் தாள்

## 2020 - 2021

## தமிழ்மொழி

## வளர் தமிழ் 12

சுட்டெண்:............................................................ நேரம்: 180 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. மெல்லினமெய் எழுத்துகளில் ஒன்று

அ) க் ☐ ஆ) ந் ☐

இ) ல் ☐ ஈ) ய் ☐

2. "பதி எழு அறியாப்பழங்குடி" எனத் தமிழ்க்குடியைப் போற்றிய நூல்

அ) சிலப்பதிகாரம் ☐ ஆ) புறநானூறு ☐

இ) நெடுநல்வாடை ☐ ஈ) அகநானூறு ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

3. பெரும் பொழுதுகளில் ஒன்று

அ) கூதிர் ☐ ஆ) யாமம் ☐

இ) நண்பகல் ☐ ஈ) மாலை ☐

4. சுரும்பு என்பது

அ) மலர் ☐ ஆ) மொட்டு ☐

இ) வண்டு ☐ ஈ) சிலந்தி ☐

5. கருங்குழலி வந்தாள் என்பது

அ) உவமைத்தொகை ☐ ஆ) உம்மைத்தொகை ☐

இ) அன்மொழித்தொகை ☐ ஈ) வினைத்தொகை ☐

TEDC

6. பார்வதி என்ற வடசொல்லின் தமிழ்ச்சொல்

அ) உமையாள் ☐ ஆ) ஔவை ☐

இ) மாதவி ☐ ஈ) மீனாட்சி ☐

7. பார்த்தனன் என்னும் சொல்லின் விகுதி

அ) பார் ☐ ஆ) அன் ☐

இ) த் ☐ ஈ) னன் ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

8. களப்பிரர் தமிழ் நாட்டில் ———— நூற்றாண்டில் நுழைந்தனர்.

அ) கி.பி. 2ஆம் ☐ ஆ) கி.பி. 3ஆம் ☐

இ) கி.பி. 4ஆம் ☐ ஈ) கி.பி. 5ஆம் ☐

9. உருவக அணிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) தேன்மொழி ☐ ஆ) மழைக்கை ☐

இ) நெஞ்சக்கல் ☐ ஈ ) தளிர்க்கை ☐

10. வெந்ததே சிந்தை என்ற பாடலைப் பாடியவர்

அ) மன்னார் அமுதன் ☐ ஆ) தாமரைக் கண்ணன் ☐

இ) கண்ணதாசன் ☐ ஈ) காசி ஆனந்தன் ☐

11. கரிகாற்பெருவளத்தானும் பெருஞ்சேரலாதனும் போர் செய்த இடம்

அ) தலையலங்கானம் ☐ ஆ) இடைக்குன்றூர் ☐

இ) வெண்ணிப்பறந்தலை ☐ ஈ ) தகடூர் ☐

TEDC

12. வீரத்தின் உயர்நிலை

அ) மானம் ☐ ஆ) பணம் ☐

இ) சினம் ☐ ஈ) செல்வம் ☐

13. பழந்தமிழரின் வீரத்தைக் கூறும் நூல்

அ) புறநானூறு ☐ ஆ) திருக்குறள் ☐

இ) அகநானூறு ☐ ஈ) சிலப்பதிகாரம் ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

14. முன்னிலை என்பது

அ) திணை ☐ ஆ) பால் ☐

இ) எண் ☐ ஈ) இடம் ☐

15. பன்னிரு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் பூ

அ) குறிஞ்சிப்பூ ☐ ஆ) மல்லிகைப்பூ ☐

இ) முல்லைப்பூ ☐ ஈ) செவ்வந்திப்பூ ☐

16. தெற்கிலிருந்து வீசும் காற்று

அ) கோடை ☐ ஆ) வாடை ☐

இ) தென்றல் ☐ ஈ) கொண்டல் ☐

17. மட்பானை என்பது ________ வகைப் புணர்ச்சியாகும்.

TEDC

அ) உயிர்முன் உயிர் ☐ ஆ) மெய்முன் மெய் ☐

இ) உயிர்முன் மெய் ☐ ஈ) மெய்முன் உயிர் ☐

18. இளவேனிற்காலத்துக்குரிய மாதங்கள்

அ) சித்திரை,வைகாசி ☐ ஆ) மார்கழி,தை ☐

இ) ஆனி,ஆடி ☐ ஈ ) மாசி,பங்குனி ☐

19. பின்வருவனவற்றுள் வினைமுற்று

அ) ஓடி ☐ ஆ) ஓடின ☐

இ) ஓடிய ☐ ஈ ) ஓடியவன் ☐

20. பாடல் அடிகளில் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது

அ) எதுகை ☐ ஆ) மோனை ☐

இ) உவமை ☐ ஈ) உருவகம் ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

21. இன்று கேரளம் என அழைக்கப்படும் நாடு

அ) சேரநாடு ☐ ஆ) சோழநாடு ☐

இ) பாண்டியநாடு ☐ ஈ) வடநாடு ☐

22. ஏழாம் வேற்றுமைத்தொகைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) தலைமயிர் ☐ ஆ) உணவு உண்டான் ☐

இ) கூலி வேலை ☐ ஈ) ஔவையார் நூல் ☐

23. தேவாரகாலத்தில் தமிழுக்காகக் கடும்பரப்புரை செய்தவர்

அ) வீரமாமுனிவர் ☐ ஆ) விவேகானந்தர் ☐

இ) விபுலானந்தர் ☐ ஈ) சம்பந்தர் ☐

24. நீரைப் பாலாகத் தண்டிலே சேர்த்து வைத்திருக்கும் செடி

அ) கற்றாழை ☐ ஆ) தூதுவளை ☐

இ) கள்ளி ☐ ஈ ) துளசி ☐

TEDC

25. குறள்:

பேராண்மை —————— தறுகண் ஒன்றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எகு

அ) இன்ப ☐ ஆ) துன்ப ☐
இ) என்ப ☐ ஈ) எண்ப ☐

26. ஐம்படைத்தாலியிலுள்ள படைக்கருவிகளில் ஒன்று

அ) கத்தி ☐ ஆ) வில் ☐
இ) வேல் ☐ ஈ) அம்பு ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

27. நன்றே செய்து, நலம் பெற வாழ்க! இச்சொல்லியம்

அ) வியங்கோள் சொல்லியம் ☐ ஆ) கூற்றுச் சொல்லியம் ☐
இ) மெய்ப்பாட்டுச் சொல்லியம் ☐ ஈ) வினாச் சொல்லியம் ☐

28. பின்வருவனவற்றுள் ஓர் எழுத்துச் சொல்

அ) ட ☐ ஆ) ண ☐
இ) ஈ ☐ ஈ) ம் ☐

29. உலகம் பழிக்கும் செயலைச் செய்யாதே! இச் சொல்லியம்

அ) இடவாகுபெயர் ☐ ஆ) காலவாகுபெயர் ☐
இ) பொருளாகுபெயர் ☐ ஈ) தொழிலாகுபெயர் ☐

30. ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளுக்குச் சமன் என்பது

TEDC

அ) விடுகதை ☐ ஆ) பாடல் ☐
இ) குறள் ☐ ஈ) பழமொழி ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

ஆரியர் என்ற சொல் சமற்கிருதம் மற்றும் ஈரானிய மொழிகளின் அடிப்படையில் அமைந்த ஆர்ய எனும் அடிச்சொல்லிலிருந்து மருவி ஆரியர் என வந்ததாகக் கூறப்படுகிறது. சட்டர்சி என்ற அறிஞர் எழுதிய நூலின்படி நாடோடியாக வாழ்ந்த ஆரியர் கி.மு 1500 களில் ஆப்கானித்தான் கைபர் கணவாயினூடாக இந்தியாவினுள் நுழைந்தனர். இவ்வாறு நாடோடியாக வந்த ஆரியர் சிந்துவெளியில் மொகஞ்சதாரோ, அரப்பா பகுதிகளில் வளமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்த திராவிடரை அடிமைப்படுத்தி அவர்களது வாழ்க்கையைச் சீர்குலைத்தனர். ஆரியரின் மேலாண்மையின் கீழ் வாழ விரும்பாத திராவிடர் தம் வாழ்புலத்தைவிட்டு தெற்கு நோக்கி நகர்ந்தனர். தொடர்ந்து ஆரியர் தமிழரின் தொன்மை அடையாளமாக விளங்கிய கோயில்களில் இருந்த மூலவர் பெயர்களையும் ஊர்களின் பெயர்களையும் தமது மொழியில் மாற்றினர். எடுத்துக்காட்டாக முருகன் - சுப்பிரமணியம் எனவும் திருவரங்கம், சிறீரங்கம் எனவும் மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. எண்ணற்ற வடசொற்கள் தமிழில் கலந்து விட்டமைக்கு ஆரியரின் வருகையே காரணமாகியது. இன்றுவரைக்கும் இந்தியாவிலுள்ள ஆயிரம் ஆண்டுகளைக் கடந்து நிலைத்து நிற்கின்ற பல இலக்கம் கற்கோவில்களில் தமிழ் எழுத்துகள் மட்டுமே பொறிக்கப்பட்டிருப்பதை ஆய்வுகள் தெட்டத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளன. கலைகளிலேயே மிகவும் சிறந்த கலையான சிற்பக்கலை திராவிட நாகரிகத்துக்குரியதே! புதைபொருள் ஆராய்ச்சியில் மீட்டெடுக்கப்பட்ட சிந்துவெளிநாகரிக எச்சங்களும் எல்லோராக் குடைவரைக் கோவில்களும் அங்கோர்வாட் கோவிலும் தமிழரின் மறைக்க முடியாத அடையாளங்களாகும். இவ்வாறு உலகின் முதற்குடியான தமிழன் வாழ்ந்ததற்கான சான்றுகள் பலவும் கிடைத்துள்ளன. எனவே அத்தனை சிறப்புகளுக்கும் உரியவர் திராவிடர் ஆகிய தமிழரே. ஆரியர் தாமே நாட்டின் பூர்விகக் குடிகள் எனக் கூறிக்கொண்டு அன்றிலிருந்து இன்றுவரை தமிழரையும் அவர்களது அடையாளங்களையும் அழிப்பதில் முன்னின்று செயற்படுகின்றனர்.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

1. தமிழரது வாழ்க்கையைச் சீர் குலைத்தவர் யார்?

2. எக்காலப்பகுதிகளில் ஆரியர் இந்தியாவினுள் நுழைந்தனர்?

3. திராவிட நாகரிகத்துக்குரிய கலை எது?

4. எங்கே தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந்தன?

5. திராவிடத் தமிழரின் மறைக்க முடியாத அடையாளங்கள் எவை?

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. கலிங்கத்துப்பரணி என்னும் நூல் எதைப் பற்றிக் கூறுகிறது?

___

___

2. தலையலங்கானத்தில் போர் புரிந்த மன்னன் யார்?

___

3. முதுகுடுமிப்பெருவழுதி மன்னன் போர் தொடங்கு முன் யார் யாரைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவிக்கிறான்?

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

___

___

4. வடக்கிருத்தல் என்றால் என்ன?

___

___

5. ஊர்காண் காதையில் தென்றலின் வரவைப்பற்றிக் கூறிய புலவர் யார்?

___

___

6. நானிலங்களும் எவை?

___

___

7. யாழ்குடாநாட்டில் கி.மு 300களில் தமிழரின் தலைநகரமாக விளங்கிய இடம் எது?

TEDC

___

புள்ளிகள் 10

**4) பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக, அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**



நம் பண்பாட்டின் வழி நடப்போம்
நாளும் நம் பண்பாட்டை வளர்ப்போம்.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TEDC

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. அ. வினா எழுத்துகள் எத்தனை? ______________________

   ஆ. அவை எவை? ______________________

2. பின்வரும் சொற்களின் உவமானம், உவமேயம்,பொதுத்தன்மை என்பவற்றைத் தருக.

| | உவமானம் | உவமேயம் | பொதுத்தன்மை |
|---|---|---|---|
| தேன்தமிழ் | ____________ | ____________ | ____________ |
| முல்லைச்சிரிப்பு | ____________ | ____________ | ____________ |

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

3. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

   பகாச்சொல் ______________________

   சினைப்பெயர் ______________________

   தெரிநிலைவினை ______________________

4. தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு சொல்லியங்கள் எழுதுக.

   கதறிக்கதறி ______________________

   கண்ணுங்கருத்துமாக ______________________

5. 1. திணைகள் எத்தனை? ______________________.

   2. தரப்பட்டுள்ள வினைச்சொல்லின் திணை, பால், எண், இடம், காலம் என்பவற்றைத் தருக.

   நடித்தீர்கள்

   திணை ______________________

   பால் ______________________

   எண் ______________________

   இடம் ______________________

   காலம் ______________________

TEDC

புள்ளிகள் 15

## 6) பந்தியை வாசித்து, மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக

தமிழர் பழங்காலத்தில் சிறு கூலங்கள் பல சரக்குகள் காய்கறிகள் போன்ற உணவுகளைப் பயன்படுத்தினர். அவற்றில் சிறு கூலங்களான வரகு, தினை, குரக்கன், சாமை போன்றவற்றை அதிகமாக உண்டதால் அவர்கள் நோய் நொடியின்றி நீண்டகாலம் நலமாக வாழ்ந்தனர் என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. ஆனால் இன்று அந்நியர் மேலாண்மைக்குப் பின் நாளும் சோற்றையே உண்டு வருகின்றனர். இன்று சிறு கூலங்களை உணவாக உண்பதைக் குறைத்து விட்டனர். இதனால் நாம் நோய்களுக்கு அடிமையாகிக் கொண்டு வருகின்றோம். கிட்டத்தட்ட கழககாலத்தில் இருந்த மூவாயிரத்துக்கும் மேற்பட்ட உணவுகளை நாம் இழந்துவிட்டோம். முன்பு உடல் வலுவுக்குத் தமிழர் உண்ட காலை உணவுகளில் ஒன்று களி. உழுத்தங்களி, கம்புக்களி, சோளங்களி, குரக்கங்களி எனப் பலவகையான களிகளைப் பயன்படுத்தினர். இவ்வாறான உணவு முறையினால் அவர்கள் கடுமையான வேலைகளை மிகவும் இலகுவாகச் செய்து முடித்தனர். ஆனால் இன்று நாம் முற்றிலும் மேற்கத்தேய உணவுகளான ரொட்டி,பிசா,நூடில்சு போன்றவற்றை பயன்படுத்துகின்றோம். துரித உணவுகளையும் விரும்பி உண்கின்றோம். இந்நிலை தொடருமானால் நாம் பெருந் துன்பத்திற்கு ஆளாவோம். இன்று நாம் உண்ணும் உணவுப் பொருட்களில் அதிகமான வேதியல் மருந்துகள் கலக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் பன்னாட்டு வணிக நோக்கங்களினால் இன்று மக்கள் நோயாளிகளாக வாழ்வதுடன் அவர்களுடைய உணர்வுகளை மழுங்கச்செய்து புதியபுதிய மருந்துகளை கண்டுபிடிக்கின்றனர். எனவே நாமே எம்மைக் காக்க வேண்டுமானால் உணவுமுறையில் விழிப்பாக இருக்க வேண்டும். நாம் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு நோயினால் பாதிக்கப்பட்டு நோயாளியாக மருத்துவரிடம் வாழ்நாள் முழுவதும் அடிமையாக வாழ்கின்றோம். இதை எமது மரபுவழி உணவுமுறைமூலம் உடைத்தெறிவோம்.

**சுருக்கத்திற்கான குறிப்புகள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- தென்றல் வரவு
- கொரோனாவும் மக்களின் இன்றைய வாழ்க்கை நிலையும்
- உணவு உற்பத்தியும் உலகநாடுகளும்

புள்ளிகள் 20

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TEDC